(6 pages)

**Reg. No. :** ......................................

**Code No. : 30544** **Sub. Code : CMTA 41**

B.A. (CBCS) DEGREE EXAMINATION,
APRIL 2024.

Fourth Semester

Tamil — Core

இலக்கணம் – அணியிலக்கணம்

(For those who joined in July 2021-2022)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தண்டியலங்காரம் எத்தனை பிரிவுகளை உடையது?

 (அ) 5 (ஆ) 6

 (இ) 3 (ஈ) 4

2. ‘பவளத்தன்ன மேனி’ இத்தொடரில் இடம்பெறும் அணியின் பெயர் என்ன?

 (அ) உருவக அணி (ஆ) உவமையணி

 (இ) தன்மையணி (ஈ) அதிசய அணி

3. வேற்றுமையணியின் வகைகள் எத்தனை?

(அ) 5 (ஆ) 7

(இ) 4 (ஈ) 9

4. "நீல மணிமிடற்றன்; நீண்ட சடைமுடியன்
நூல் அணிந்த மார்பன்; நுதல் விழியன்
... ... ... எம்மான் இமையோர்க்கு இறை"
இதனுள் பயின்று வந்துள்ள அணி யாது?

(அ) ஏதுவணி (ஆ) ஒட்டணி

(இ) தன்மையணி (ஈ) வேற்றுமையணி

5. 'விளக்கு அணி' என்று அழைக்கப்படும் அணியின் மற்றொரு பெயர் என்ன?

(அ) தீவக அணி (ஆ) ஒட்டணி

(இ) ஏதுவணி (ஈ) வேற்றுமையணி

6. செய்யுளில் முன்னர் வந்த சொல்லே பின்னர் பல இடத்தும் வருதல் ————

(அ) உருவக அணி (ஆ) பின்வருநிலையணி

(இ) சுவையணி (ஈ) சிலேடையணி

7. அதிசய அணியின் வகைகள்

(அ) 6 (ஆ) 2

(இ) 7 (ஈ) 10

8. புலவன் ஒரு பொருளை உயர்ந்தோர் வியப்புறுமாறு சொல்வது எவ்வணி?

(அ) சுவையணி (ஆ) இலேச அணி

(இ) அதிசய அணி (ஈ) தற்குறிப்பேற்ற அணி

9. "வைகலும் வைகல் வரக்கண்டும்" என்பது எவ்வகை அணி?

(அ) சொற்பொருள் பின்வருநிலை அணி

(ஆ) பொருட் பின்வருநிலை

(இ) தற்குறிப்பேற்ற அணி

(ஈ) சொல்லணி

10. "மூவாத் தமிழ் பயந்த முன்னூல் முனிவாழி! ஆவாழி! வாழி அருமறையோர்!" – இதில் பயின்றுள்ள அணி எது?

(அ) பரியாய அணி

(ஆ) ஒட்டணி

(இ) சங்கீரண அணி

(ஈ) வாழ்த்தணி

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

11. (அ) கௌடநெறி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தொழில் உவமையினை விளக்குக.

12. (அ) தொகைவிரி உருவகத்தினைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) முன்னவிலக்கணி என்றால் என்ன? விளக்கம் தருக.

13. (அ) ஒட்டணி பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) அதிசயவணி குறித்து எழுதுக.

14. (அ) ஏதுவணியினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஆர்வமொழியணி பற்றிக் கூறுக.

15. (அ) விசேவணி பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒப்புமைக் கூட்டணி என்றால் என்ன? விளக்குக,

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தருக.

16. (அ) தன்மையணியினைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) 'உவமையணியே தாயணி!' நிறுவுக.

17. (அ) தொகையுருவகம், தொகை விரி உருவகம் – இவற்றை விள்க்குக.

(அல்லது)

(ஆ) தீவக அணியின் இலக்கணம் கூறி, வகைகளைச் சான்றுடன் விளக்குக.

18. (அ) முன்னவிலக்கணி வகைகளை இலக்கணம் கூறி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வேற்றுப்பொருள் வைப்பணியின் வகைகளை விவரிக்க.

19. (அ) 'நிரல் நிறையணி' பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) சுவையணியின் வகைகளைச் சான்றுடன் விளக்கியெழுதுக.

20. (அ) சிலேடையணியின் இலக்கணத்தை சான்று தந்து விவரி.

(அல்லது)

(ஆ) புணர்நிலையணி என்றால் என்ன? அதன் வகைகளைத் தருக.

---